REGD. No. M. 6311

PHONE No: 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 273

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)

ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0

வெளிநாடு:

ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: சித்திரை 21உ திங்கள் (3—5—54) ★ ★ ★ வெளியூர்: சித்திரை 22உ. செவ்வாய் (4—5—54)

கழகம் பிறந்த சேலத்தில் சங்கநாதம்

—(✶)—

ஐம்பதாயிரத்திற்கதிகமான ஆண்கள்! அதற்கு நிகர் பெண்கள்!

செயல் வீரர் சித்தரித்த கருத்தோவியங்கள்

ஆற்றல் வீரர் எழுப்பிய பாணி

கழக வீராங்கனைகளின் வீர முரசம்

சேலம் மாவட்ட தி. மு. கழக இரண்டாவது சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள், சேலம் விக்டோரியா மைதானத்தில் அழகுற அமைக்கப்பட்டிருந்த பரசுராமன் பந்தல்—வள்ளியப்பன் அரங்கில் மே திங்கள், 1, 2 ஆகிய நாட்களில் வெகு விமரிசையாக நடைபெற்றன.

திராவிடர் இயக்கத்தின் சரிதத்திலே, பொன்னான ஒரு திருப்புமுனையைத் தந்த பெருமை சேலத்திற்கு உண்டு. அங்கு 1944-ம் ஆண்டு கூடிய நீதிக் கட்சி மாநாட்டில்தான், பணக்காரர்களின் கூடாரமாக விளங்கிய நீதிக் கட்சி, பாட்டாளியின்—ஏழையின் துன்பம் துடைக்கும் தூய எண்ணத்துடன் இன்றைய தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணதுரை அவர்களால் திராவிடர் கழகமாக மாற்றப்பட்டது.

உலகம் வியக்க வளமுற வாழ்ந்து, இடையில், வந்தாரை எல்லாம் வாழ்விக்கும் வான் கருணை நெஞ்சத்தால்—மாற்றாரின் வஞ்சகத்தால் வீழ்ந்து, மீண்டும் வாழ்வுக்காக ஏங்கித் தவிக்கும், வாழத் துடிக்கும் திராவிடர் சமுதாயத்தின் தேசிய விடுதலை கீதமான 'திராவிட நாடு திராவிடர்க்கே' என்ற உரிமை முரசு முதன்முதல் ஒலித்த இடம் சேலம். அங்கு நான் 10 ஆண்டுகட்கும் பிறகு திராவிட வீரர்கள் முன்னேற்றக் கழகமாக முன்னேறிய பிறகு இரண்டாம் முறையாக மாநாட்டிலே கூடினர். பொதுச்செயலாளர் அண்ணதுரை அவர்களும், முன்னணி இயக்க வீரர் பலரும், பல்லாயிரக்கணக்கான திராவிடச் செம்மல்களைச் சந்தித்தனர்.

மே முதல் நாள், ஆம்! "வலியோர் சிலர் வாழ, எளியோர் பலரை வதையே புரிகுவதா? உழைக்கிறோம்! ஆனால், அதற்கோர் அளவு வேண்டாமா? நாள் முழுதும் ஓயாது உழைக்க நாங்கள் என்ன இயந்திரங்களா? எங்களுக்கு ஓய்வும், சிறிது உல்லாசமும் வேண்டாமா?" என உதிரத்தை வியர்வையாக்கி, உழைப்பை முதலாளியின் லாபமாக்கி, உடல் தேய்ந்து உருக்குலைந்த உழைப்பாளர்கள் தங்கள் உரிமைக் குரலை எழுப்பியமைக்குப் பரிசாக, பலரைப் பிணமாகப் பெற்றதின் நினைவாக உலகத் தொழிலாளர் கொண்டாடும் ஒரே திருநாள் மே நாள்;

அன்றுதான் சமூக சீர்திருத்த மாநாடு, இசை முரசு நாகூர் அனீபாவின் இன்னிசை முழக்கத்துடன் ஆரம்பமாயிற்று. சென்னை வழக்குரைஞர் பி. ஆர். கோகுலகிருட்டிணன் மாநாட்டைத் துவக்கி வைத்து, திராவிடச் சமுதாயம் சீர்திருத்தப்பட வேண்டிய அவல நிலைக்கு ஆளாக்கப்பட்டதையும், அந்தச் சீரிய சீர்திருத்தப் பணியை தி. மு. கழகத்தவர் செம்மையுறச் செய்து வருவதின் முக்கியத்துவம் பற்றியும் விளக்கினார்.

அடுத்து, மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் திரு. ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் சுயமரியாதை இயக்க காலந்தொட்டு, தான் தனது வாழ்வை இயக்கத்தின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்துவிட்டதைப் போல, எல்லோரும் இயக்கத்திற்கு, அதன் லட்சியத்தை ஈடேற்றுவதற்காக வாழ்வைத் தாருங்கள் என்று கேட்பது போலவும், "வாருங்கள்; ஒன்று சேருங்கள்; உங்கள் உழைப்பைத் தாருங்கள்! உயரிய லட்சியம் காண வழி தேடுங்கள்!" என்று எல்லோரையும் வரவேற்றுவிட்டு, மாநாட்டிற்குத் தலைமை தாங்கி நடத்தித் தருமாறு, திருவண்ணாமலை நகர சபையின் முன்னாள் தலைவரான தோழர் ப. உ. சண்முகம் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

தோழர்கள் எம். பி. சுப்பிரமணியம், இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் வழிமொழிய தோழர் ப. உ. சண்முகம் தலைமை ஏற்று தனது தலைமையுரையாற்றினார்.

"பிரிட்டானியக் கடற்கரையிலே சாக்சானியர்கள்—வெள்ளையர் எல்லாம் மீன் பிடிக்கக் கற்றுக்கொண்டிருந்த காலத்திலே, ஆழ்ந்த கடல்களின் அலைகளை அடக்கி ஆளும் சக்தி பெற்றிருந்த பழம்பெரும் நாகரீகமிக்க திராவிடச் சமுதாயம் இன்று இந்த நிலைக்கு எப்படி வந்தது?" என்ற கேள்விகளை எழுப்பி, பதில்களும் தந்தார்.

அடுத்து, தோழியர் பூங்கோதை "சமுதாயம் புரட்சி" என்ற தலைப்பில் பேசியதும் தோழர் டி. கே. தாமரைச்செல்வன் "நாடகமும் சினிமாவும்" என்ற தலைப்பில் தி. மு. கழகம், நாடகம், சினிமா ஆகியவற்றுடன் கொண்டிருப்பது வெறும் தொடர்பே அன்றி உறவு அல்ல; நாடகமும்—சினிமாவும் நமது லட்சியக் கருத்துக்களை பரப்ப நாம் கொண்டுள்ள சாதனங்களிலே சிலவே அன்றி, நாடகமும்—சினிமாவுமே அல்ல நமது லட்சியம்," என்ற தெளிவுரை தந்தார்.

அடுத்து தோழர் கண்ணதாசன் "இலக்கியம்" என்ற தலைப்பில், பேச்சுப் படையல் விட்டார்.

அத்துடன் மாநாடு இடைவேளைக்காகக் கலைந்தது.

மாநாடு மீண்டும் மாலை 3 மணிக்குத் தோழர் எச். வி. சீனிவாசன் இன்னிசையுடன் துவங்கியது.

பழம் பெரும் சீர்திருத்தச் செம்மல் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள், 'மதமும் புராணமும்' என்ற பொருள் பற்றி, "மதம், மனிதனை மடையனாக்குகிறது—மனிதனுக்கவில்லை; புராணம் மனிதனின் புத்தியைக் கெடுக்கிறது—அறிவை வளர்ப்பதில்லை," என்ற உண்மையைச் சான்றுகளுடன் தமக்கே உரித்தான நடையில் விளக்கினார்.

'இன்றைபதினம்' என்ன தினம்? ஏன் இந்த 'இன்றைப தினம்' உலகத் தொழிலாளரால் கொண்டாடப்படுகிறதென தோழர் அரங்கண்ணல் எடுத்துச் சொன்னார்.

அடுத்து, தோழர் என். எஸ். இளங்கோ துருக்கிய சமுதாயத்தைத் திருத்திய 'கமால் பாட்சா'வை படம் பிடித்துக் காட்டினார்.

தோழர் தில்லை - வில்லாளன் 'புதிய இலக்கியம்' படைத்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

அரசியல் மாநாட்டு நிகழ்ச்சி

இரண்டாம் நாள் 2—5—54 ஞாயிறன்று காலை 9-மணி அளவில் அரசியல் மாநாடு துவங்கியது. துவக்கமாக மாநாட்டுத் தலைவர் இரா. இளம்வழுதி அவர்களால் மாநாட்டில், தி. மு. கழகக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

மாநாடு, பாண்டிய நாட்டு 'முத்து'வால் திறந்து வைக்கப்பெற்றது. திறப்புரையில், "ஏக இந்தியா என்ற போர்வையில் தென்னாடு சூறையாடப்படுவதைத் தடுக்க திராவிடம் பிரிந்தே ஆக வேண்டும்" எனத் தோழர் முத்து அறுதியிட்டுச் சொன்னார்.

வரவேற்புக்குழுத் தலைவர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தனது வரவேற்புரையை நிகழ்த்திவிட்டு மாநாட்டிற்குத் தலைமை தாங்குமாறு தோழர் இரா. இளம்வழுதி அவர்களை முன்மொழிந்தார். தோழர்கள் ப. ராமலிங்கம், ஈரோடு எல். அய்யாவு, சிற்றுளி சுப்பிரமணியம், க. அன்பழகன் ஆகியோர் வழிமொழிய தோழர் இளம்வழுதி தலைமை ஏற்று அரியதோர் அரசியல் சொற்பெருக்காற்றினார்.

"உறுதி தருவீர்—உதவி பெறுவீர்" என்ற தி. மு கழகத்தின் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு, உதவி பெற்று, சட்டசபை உறுப்பினராகியதும், நாம் செய்த உதவியையும், அவர் தந்த உறுதியையும் மறந்து மந்திரியாகியிருக்கிற உழைப்பாளர் கட்சித் தலைவர் இராமசாமி படையாச்சி போன்ற மக்கள் துரோகிகளுக்கு துணையாக, இனி நாம் எதிர்காலத்திலே போகக் கூடாது—நாமே, அரசியலைக் கைப்பற்ற வேண்டும்" என்ற கருத்தறிவித்தார்.

அடுத்து தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் 'ஏகாதிபத்தியங்கள்' என்ற தலைப்பில் "ஏ! ஆதிபத்தியக்காரர்களே! ஆணவத்தால், ஆரிய வார்த்தைகளை அள்ளி வீசும் புதிய, ஏக இந்திய ஏகாதிபத்தியத்தின் ஏகத் தலைவரான பண்டிதரே! நான்கு முறை உமது நாணயமில்லாத நாணயமற்ற துடுக்குத்தனத்தை திராவிடம் அனுமதித்துவிட்டது. ஐந்தாம் முறை திராவிடம் அனுமதிக்குமா?" என முழங்கினார்.

பின்னர் தோழர் கி. மனோகரன், 'நாட்டுப் பிரிவினை'யின் அவசியத்தை எடுத்துக் காட்டியதும் மாநாடு இடைவேளைக்காகக் கலைந்தது.

மீண்டும் மாலை 3 மணிக்கு பிற்பகல் நிகழ்ச்சிகளின் துவக்கமாக நாகூர் அனீபா திராவிடப் பண் இசைத்தார்.

தோழர் என். எஸ். இளங்கோ, 'ஐக்கிய திராவிடத்'தின் எல்லைக்கோடுகளை வரைந்து தந்தார்.

தோழியர் சத்தியவாணி முத்து "அரசியலில் பெண்கள்" செய்த அரிய சேவையை விளக்கினார்.

ஆத்தூர் எம். பி. சுப்ரமணியம் எம். எல். ஏ., திராவிட சட்டசபைக் கட்சியின் தோற்றத்தை எடுத்துச் சொன்னார்.

தோழர் சி. பி. சிற்றரசு 'விடுதலை வீரர்கள்' சிலரை அறிமுகம் செய்தார்.

தோழர் கிருஷ்ணமூர்த்தி எம். எல். ஏ., பேசியதும், தோழியர் அருள்மொழி, "பெண்கள் முன்னேற்றம்" அடைய வேண்டியதைச் சுட்டிக்காட்டினார்.

பின்னர் கல்லாவி ஏ. துரைசாமி எம.எல்.ஏ., பேசியதும், தோழர் என். எஸ். ராசேந்திரன், "நாடகமும் அரசியலும்" ஏன் ஒன்று சேரக்கூடாது? என்று கேட்டார்?

தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, 'வடக்கும் - தெற்கும்' என்று திரை காட்டினார்.

தோழர் என். வி. நடராசன், 'வகுப்புரிமை நமக்கு என்ன நன்மைகளைச் செய்தது? அது ஏன் நமக்குத் தேவை? என்பதை எடுத்துச் சொன்னார்.

பின்னர் தோழர் கே. ஏ. மதியழகன் "அடிப்படை உரிமைகள்" கோரினார்.

தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல. ஏ, திராவிட சட்டசபைக் கட்சியில் சேர்ந்து எதிர்க் கட்சியில் உட்கார அண்ணாவின் அனுமதிகிடைத்ததைத் தெரிவித்து பெருமைப்பட்டுக் கொண்டார்.

அடுத்து தோழர் நெடுஞ்செழியன், "திராவிடத்தின் வளங்கள்" எவ்வளவு என்பதை அளந்து சொன்னார்.

தோழர் கருணாநிதி திராவிடர்களுக்கு "அரசியல் எழுச்சி" ஊட்டினார்.

இறுதியாக பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள், குளிர்ந்தொருகருத்து மழைபால் திராவிடர் தம் உளத்தை நிரப்பினார்.

பொதுச் செயலாளர், அறிவுரை நிகழ்த்து முன்னர் மாநாட்டுச் செயலாளர்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 3—5—54 திங்கள்

அணையா விளக்கு!

நம்மரும் திராவிட நாட்டில் உள்ள பிரெஞ்சிந்திய தமிழ்ப் பகுதிகளை, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டுமென்ற விருப்பம், அப்பகுதியில் வாழும் பெரும்பான்மையான தமிழ் மக்களுக்கும் பல ஆண்டுகளாகவே இருந்துவந்து இருக்கிறது எனினும், அந்த உரிமை வேட்கை இப்பொழுதுதான் வெளிப்படையாக இயக்கத் துவங்கி இருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், தம்மிச்சையாக வலிய வெளியேறினதானது, பிரெஞ்சிந்திய மக்களின் விடுதலை வேட்கையை, முன்னிலும் பன்மடங்கு வளமும், வலிவும் பெறச் செய்தது. பிரிட்டிஷார் வெளியேறிய அன்றுதான், பிரெஞ்சிந்திய மக்களுக்கும் அரசியல் அடிமைத்தனத்தில் அதிருப்தியும், விடுபட்டாக வேண்டும் என்பதில் உறுதியும் பிறந்தது. அது, பிரெஞ்சிந்திய மக்களிடம் குறிப்பிடத்தகுந்த ஒரு உருவம் பெற்று, செயல்பட முனைந்தது.

அத்துறையில் ஈடுபட்டு உழைத்த உத்தமர்கள் பலர், அவ்விடுதலைப் பண்பு கெட்டுவிடாமல், இப்பொழுதும் இணைப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டு இன்னல் பல ஏற்று வருகிறார்கள். அவர்கள் விடுதலைக் குரல் எழுப்பிய நேரத்தில், அன்று, பிரான்சில் அமைந்து இருந்த அமைச்சர் குழுவின் அடிப்படை அமைப்புக்கேற்ப, பிரெஞ்சு கூட்டில் ஒரு உறுப்பாக பிரெஞ்சிந்தியா இருக்க வேண்டும் எனப் பேசி, அரசியல் அடிமை நிலைக்குத் தத்துவார்த்தம் கூறினவர்களும், அப்பொழுது அங்கு இருக்கத்தான் செய்தார்கள்! இவர்கள் செய்த எதிர்ப்பு, விடுதலை வேட்கை கொண்டவர்களின் விடுதலை முழக்கத்தைத் தற்காலிகமாக மட்டுப்படுத்திவிட்டது. விடுதலை இயக்கம் மங்கியது; ஆனால், மறையவில்லை! நீர்பூத்த நெருப்பாக இருந்து வந்தது!

பிரான்ஸ் ஆட்சி அமைப்பு மாறினதும், முன்னாள் பிரெஞ்சு கூட்டை விழைந்தவர்கள், வேறு குரல் கொண்டு விடுதலை நாதத்தை எழுப்ப முன்வந்தனர். இத்தகு குணமுள்ளவர்களுந்தான், இன்று நடைபெறும் பிரெஞ்சிந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டுள்ளனர்.

அடிமையாகக் கிடப்பதையே பெருமைப்படக் கூடிய பண்பாகக் கருதுமாறு போதனை புரிந்துவரும் இந்து மதத்தின் அணைப்பில் கிடந்துழலும் மக்கள்தான் பிரெஞ்சிந்தியாவில் வாழும் தமிழ் மக்களும்! உரிமைப் பண்பு, அத்தகைய அடிமை போதனையில் மயங்கிக் கிடப்பவர்களிடம் எழுவது என்பது, இலகுவில் எதிர்பார்க்கக்கூடிய காரியமல்ல. யார் ஆண்டால் என்ன என்று, அம்மக்களிடம் வேரூன்றிக் கிடந்த அலட்சியப்போக்கு, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு அரணாக அமைந்திருந்தது.

காலவேகம் கருத்து வேகத்தை உண்டாக்கியது. புதுக் கருத்து, தனது பங்காக புதிய பார்வையை மக்களுக்குக் கொடுத்தது.

'ஆறிலும் சாவு நூறிலும் சாவு! அடிமையாகச் சாவதிலும் கூட்டற்ற நிலையில் சாவோம்' எனும் புத்துணர்ச்சி, இன்று புதுவை மக்களிடம் பூத்துள்ளது!

மற்றவர் தண்ணீர் ஊற்றி, விடுதலைக்கொடியை வளர்த்த நேரத்தில், அது கண்டு மனம் பொறுக்காது, ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்த சுகஜீவிகள், நீர்க்குடத்தை உடைத்தனர். தளதளவெனக் கருத்தாக்கும், கண்ணுக்கும் காட்சி விருந்தாக இருந்த விடுதலைக் கொடியையும், அடக்குமுறைகளெனும் ஆடு மந்தைகளை விட்டு அழிக்க முனைந்தனர். கொடி, மேனி குலைந்ததே யல்லாது, வேர் செத்துப் போகவில்லை.

கழுவாய் தேடும் வகையில், குபேர் குழுவினர் விடுதலை சங்கை முழங்கினர். வாய்ப்புக்கு காத்துக் கிடந்த, மற்றக் கட்சியினரும், தங்கள் தங்கள் விடுதலைக் கொடியைத் தூக்கிப் பிடித்தனர். ஹிலாரியும், தேன்சிங்கும் ஒன்றாக கூடித்தான் எவரெஸ்ட் சிகரம் ஏறினர். இருந்தாலும், இருவரில் முதல் முதலாக சிகரத்தின் உச்சியில் முதலடி வைத்தது தேன்சிங்கை அல்லவா, புகழ் சுற்றிச் சுற்றி வட்டமிடுகிறது. அதனால் ஹிலாரிக்கு இழுக்கு ஒன்றுமில்லை. அவருக்கும் இடம்பெறிய புகழிலே பங்குண்டு; வரலாற்று ஏட்டிலும் இடமுண்டு! ஆனால் ஒரே ஒரு வேற்றுமை! முதல்—இரண்டாவது என்பதுதான!

எங்கோ ஓர் மூலையில் இருந்து குபேர் குழு ஏற்றிய விடுதலை விளக்கு இன்று ஐம்பது சதுர மைல் சுற்றளவு வரை ஒளி பாய்ச்சிக்கொண்டு இருக்கிறது. அன்று அகல விளக்காக இருந்தது இன்று அகண்ட தீபமாக மாறிவிட்டிருக்கிறது! அகல் விளக்கு, மெல்லிய தென்றலிலும் அணையக்கூடியது! ஆனால் இன்றுள்ள விளக்கோ, புயலையும் தாங்கி ஒளி தரக்கூடியது!

வாழ்க விடுதலை வீரர்கள்! வெல்க அவர்கள் அறப்போர்!

50 சதுர மைல், பிரெஞ்சிந்தியாவின் மொத்தத்தில் ஒரு பங்கு நிலப்பரப்பாகும். இதற்காக ஏறக்குறைய 35 நாட்கள் செலவாகி இருக்கின்றன! மேலும் இரண்டு திங்கள் போதும், முழு பகுதியும் விடுபட! தீவிரமாகட்டும் திருப்பணி! ஏகாதிபத்தியத்தை விரட்டியடிக்கும் சுதந்திர நாட்டின் பணி!

பம்பாய் தி. மு. க. முதல் மாநாடு

வரவேற்புக்குழு கூட்டம்

22—4—54 மாலை சுமார் 7-30-மணிக்கு மாநாட்டு அலுவலகத்தில் தோழர் சி. த. மு. இர. சூரியசங்கரன் தலைமையில் மாநாட்டு வரவேற்புக் குழு கூட்டம் நடைபெற்றது. அத்தைக்குடி, பல்லக்குடி ஆகிய இடங்களில் உயிர்நீத்த தோழர்களின் குடும்ப நிதிக்கு நடிக்கவிருந்த "பார்ப்பிரம்மம்" நாடகத்திற்கு இதுவரை பம்பாய் சர்க்காரிடமிருந்து அனுமதி கிடைக்காததால் நாடகத்தை ஒத்திவைப்பதெனவும், தோழர் சி. பி. சிற்றரசு அவர்களுக்கு உடல் நலம் குன்றிய காரணத்தினால் ஏப்ரல் 24, 25, ஆகிய நாட்களில் நடைபெறவிருந்த பொதுக்கூட்டத்தை மே மாதம் 8, 9-ந் தேதிகளில் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

பொதுக் கூட்டங்களுக்கு வரவேற்பாளராக தோழர் உ. அ. செல்லையாவும், தலைவர்களாக முறையே தோழர்கள் எஸ். வள்ளிநாயகம், என். தியாகராசனும், கொடியேற்றுபவராகத் தோழர் கே. கே. ராமநாதனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நல்ல சூழ்நிலையிலேயே நாகரீகம் தெரியாதவர்கள்!

— (:) —

நாகர்கள் நடத்தை பற்றி சாட்சியம்

"நல்ல சூழ்நிலையிலேயே நாகர்களைச் சமாளிப்பது மிகவும் சிரமம்; அதுவும் பிரம்மாண்டமான மக்கள் கூட்டத்தின் இடையில் அவர்களுடைய பழக்க வழக்கங்களுக்கு இடையூறு ஏற்பட்டு விட்டாலோ கேட்கவே வேண்டிய தில்லை,"

—என்று, கும்பமேளா சம்பவம் பற்றி விசாரிக்கும் கமிட்டி முன்பு சாட்சியம் கூறுகையில் அலகாபாத் மாஜிஸ்திரேட் கூறிவிட்டு, 'நாக சாதுக்கள் முறைதவறி நடந்து கொண்டதுதான் கும்பமேளா சம்பவத்திற்கு முக்கிய காரணம்," என்று குறிப்பிட்டார்.

ஹம்பர்க், ஜெர்மனி ஏப். 29—

ஜெர்மனியில் 30 அணுபீரங்கிகளை அமெரிக்கா வைத்திருப்பதாக அறியப்படுகிறது. சாதாரண குண்டுகளையும் அப்பீரங்கி சுட முடியுமாம்.

பொதுவுடைமைத் தலைவலி

பிரிட்டனைப் பாதிக்காது என்கிறார் சர்ச்சில்

"உலகின் சில நாடுகளில் பொதுவுடைமைத் தலைவலி பாதிக்கவே செய்கிறது; ஆனால், அந்த அளவுக்குப் பிரிட்டனில் எதுவும் ஏற்படவில்லை—ஏற்படவும் முடியாது—ஏற்பட்டு விடாதவாறு கண்காணிக்கத் தகுந்தவிழிப்பு நிலையோடு கூடிய நிர்வாகம் அங்கே இருக்கிறது,"

என்று, பிரிட்டனில் நடைபெற்று வரும் பொதுவுடைமையர் நடவடிக்கைகளையும், பிரசாரங்களையும் பற்றி விசாரிக்க ஒரு குழு நியமிக்க வேண்டுமென்ற ஆலோசனையை ஏற்காது காமன்ஸ் சபையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நாசவேலைக்காரர்கள் தலியவில்லையாம்!

ஹாங்காங், ஏப் 30—

சீனாவில் தொலைதூரப் பகுதிகளில் கம்யூனிஸ்டு அதிகாரிகளை நாசவேலைக்காரர்கள் கொன்றதாகவும், அரசாங்க தானியக் கிடங்குகளை கொளுத்த முயன்றதாகவும் சீன அரசாங்கப் பத்திரிகை கூறுகிறது. கிராமப் பகுதிகளில் பக்தோபஸ்து ஏற்பாடுகளைப் பலப்படுத்த வேண்டும் என்று அது வற்புறுத்தியிருக்கிறது. புரட்சி எதிர்ப்பாளர்கள் இன்னும் அடியோடு ஒழிக்கப்படவில்லை என்று பத்திரிகை எச்சரிக்கிறது.

ஐதராபாத் அரண்மனை குமரிக் கோட்டமா?

விசாரித்து உண்மையை அறியுமாறு மாஜிஸ்திரேட் உத்தரவு

ஐதராபாத் கோத்தி அரண்மனையில் 200-க்கு மேற்பட்ட மணமாகாத பெண்கள் அடிமைகளைப் போன்று வைக்கப்பட்டுள்ளனரென்று வக்கீல் ஒருவர் செய்த புகார்மீது, இதைப் பற்றி விசாரணை செய்யும்படி ஜில்லா மாஜிஸ்திரேட் போலீஸ் கமிஷனருக்கு உத்திரவிட்டுள்ளார்.

நிஜாம், ராஜ பவனத்தை ஒரு சிறையைப்போல் வைத்துக் கொண்டிருக்கிறாரென்றும், ஆண்களும் — பெண்களும் அடிமைகளைப்போல வைக்கப்பட்டுள்ளனரென்றும் புகார் செய்யப்பட்டது.

ராஜ பவனத்தின் வாசலில் ஒரு பெண் அழுத கண்ணீரோடு நிற்பதைக் கண்டு தான் விசாரித்துப் பார்த்ததாகவும் வக்கீல் கூறினார்.

மதாம் சியாங்கிற்கு சரும நோய்!

சிகிச்சைக்காக அமெரிக்க யாத்திரை

சான்பிரான்ஸிஸ்கோ, ஏப். 30—

முன்னாள் சீனத் தலைவரான சியாங்கே-ஷேக்கின் மனைவிக்கு சரும நோய் ஏற்பட்டு இருக்கிறது. அதற்குச் சிகிச்சை செய்து கொள்வதற்காக, சீன தேசிய விமானப் படையைச் சேர்ந்த விமானமொன்றில், பறந்து சென்று, அமெரிக்காவில் உள்ள டிராவிஸ் விமானப்படை தளத்தில் இறங்கினார். பாதுகாப்புப் படையினர் பத்திரிகை நிருபர்களை, அம்மையாரை சந்திக்க விடாமல், தளத்திலிருந்தே விரட்டிவிட்டனர்.

கன்னடத்தில் நமது குரல்

மைசூர், ஏப். 26—

மைசூருக்கு 200 மைல் தூரத்திலுள்ள மாவட்ட தலைநகரமாகிய ஷிமோகாவில் தோழர் வி. கே. ராஜா தலைமையில், மக்கள் மறுமலர்ச்சி பொதுக் கூட்டம் நடைபெற்றது. தி. மு. கழகம் நாட்டிற்குச் செய்த நல்ல தொண்டினைப் பற்றி தோழர்கள் சிதம்பரம், செல்வராஜ் ஆகியோர் பேசினர்.

மே மாதம் இறுதியில் தி. மு. கழக திறப்பு விழாவை ஷிமோகாவில் நடத்துவதென்றும், அவ் விழாவிற்கு தோழர்கள் என். எஸ். கிருஷ்ணன், நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., ஏ. எல். சி. கிருட்டிணசாமி, கி. வே. வரதராசன் ஆகியவர்களை வரவழைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

2-வது அபிவிருத்தி திட்டம்

உருவான நிலைமை ஏற்படுமோ?

"அயல்நாட்டு உதவி கிடைக்குமா கிடைக்காதோ என்ற நிலைமை ஏற்பட்டுள்ளதால், உள்நாட்டில் உள்ள சக்திகளை எல்லாம் திரட்டினாலொழிய 2-வது ஐந்தாண்டுத் திட்டம், முதல் திட்டத்தைவிடப் பெரியதாக இருக்க முடியாது என்று கருதப்படுகிறது.

சர்க்கார், தனிப்பட்ட முயற்சி ஆகிய இரண்டைக் கொண்டும் ரூ. 5000 கோடிக்குத் திட்டம் வகுக்க இப்பொழுது யோசிக்கப்படுகிறது. ஆனால், ஆரம்பத்தில் ரூ 7,000 கோடிக்குத் திட்டம் வகுக்கவே எல்லோரும் விரும்பினர்.

இங்கல்ல—அங்கே!

புதுடில்லி, ஏப். 30—

பம்பாயில் கட்டப்பட்டு வருகிற உரேனியம், தோரியம் உற்பத்தி தொழிற்சாலை இவ்வாண்டு இறுதிக்குள் கட்டி முடிக்கப்படுமென்று இந்திய மேல்சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலைக்கு வெளி நாட்டிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும் கிடைக்கவேண்டிய இயந்திரங்கள், கருவிகள் அடுத்த மூன்று மாதங்களுக்குள் தயாராகிவிடும். நாட்டின் மற்ற பகுதிகளிலும் உரேனியம் கிடைக்கிறது.

10-ஆண்டு சேமிப்புப் பத்திரங்கள் வெளியீடு

புதுடில்லி, ஏப். 30—

தேசிய திட்டக் கடன் பத்திரத்தின் ஒரு பகுதி 10 ஆண்டு சேமிப்பு பத்திரங்களின் புதிய வரிசை வெளியீடுபற்றி இன்று மத்திய சர்க்கார் நிதி இலாகா அறிவித்துள்ள அறிக்கை, தேசிய திட்டக் கடனுக்கு சிறு தொகை உதவவிரும்புகிறவர்களுக்கு வசதியளிக்கும் நோக்கத்துடன் இந்தச் சேமிப்புப் பத்திரங்கள் ரூ 25-க்கும், ரூ. 50-க்கும் விற்கப்படும் ஒருவர் உயர்ந்தபட்சம் ரூ. 1000 வரை இந்தச் சேமிப்புப் பத்திரங்களை வாங்கலாம்.

இப்பத்திரங்கள் வாங்கப்பட்ட தேதியிலிருந்து 10 ஆண்டின் முடிவில் ரூ 25 பத்திரத்திற்கு ரூ 36—4—0-ம், ரூ. 50 பத்திரத்திற்கு ரூ 72—8—0-யும் கொடுக்கப்படும். பூர்த்தியாகும் தேதிமுடிய (அதாவது 10 ஆண்டுகள்) இப்பத்திரங்கள் மாற்றப்படாமலிருந்தால் ஆண்டிற்கு $4\frac{1}{2}$ சதவிகித வட்டி விகிதம் அளிக்கப்படும்.

பஞ்சாபில் புதிய கல்வி திட்டம்

சென்னையின் புதிய கல்வித் திட்ட அடிப்படையில் பஞ்சாப் சர்க்காரும் ஆரம்பக் கல்வி முறையை மாற்றியமைக்க புதுத் திட்டமொன்று வகுத்துள்ளதாகத் தெரிகிறது.

இப்போதுள்ள ஆசிரியர் அல்லது சாதன பலத்தைக் கூடுதலாக்காமலேயே பள்ளிக்கூடங்களில் மாணவர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க முடியுமென்று சர்க்கார் நம்புகின்றனர். இதனால் செலவும் அதிகமாகக் கூடிவிடாது என்றும் கூறப்படுகிறது.

டிரைவர் வாயில் துணியை அடைத்துக் கடத்தினர்

(:)

விநாயகம் குழுவினர் மீது வழக்கு:

நான்கு சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்

அரக்கோணம், ஏப். 29—
26—9—53-ல், திருத்தணியில், தோழர் ஏ. எல். சி. கிருட்டினசாமி தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில் குழப்பம் விளைவித்ததாகவும், சிலரைத் தாக்கியதாகவும், ஏ. எல். சி. கிருட்டினசாமி காரை உடைத்து சேதப்படுத்தியதாகவும் திருத்தணி பஞ்சாயத்து போர்டு உபதலைவர் கே. எம். வெங்கடேசன் உள்பட விநாயகம் குழுவினரைச் சேர்ந்த 5 பேர் மீது திருத்தணி போலீசாரால் தொடர்ந்த வழக்கு இன்று சத்திரகிரி அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முதலாவதாக ஏ. எல். சி. கிருட்டினசாமி விசாரிக்கப்பட்டார். அவர் சாட்சியத்தில் கூறியதாவது:—

"நான் வடஆற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளராகப் பணியாற்றி வருகிறேன்; 26—9—53ல், திருத்தணி தி. மு. கழகச் சார்பில் பொதுக் கூட்டம் நடத்த என்னை அழைத்திருந்தார்கள்; நான் அன்று கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசினேன்; தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, ஏ. முனுசாமி, என். ஏ. ரசீத். வெற்றி அரசு ஆகியோர்களும் பேசினர்; கூட்டம் மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையில் நடைபெற்றது: சுமார் 8-30 மணிக்கு மேடையை நோக்கி இரண்டு கற்கள் வந்து விழுந்தது; உடனே மின்சாரக் கம்பிகள் அறுக்கப்பட்டன; சிறிது நேரத்தில் பழுதுபார்த்து யாவரும் பேசியபின், கூட்டம் 10 மணிக்கு முடிந்தது.

"கூட்டம் முடிந்ததும், நானும் டி. வி. நாராயணசாமியும் மற்றும் சிலரும் என் காரை (எம். எஸ். சி. கே 5401) நோக்கிப் புறப்பட்டோம்; வழியில் சேக் என்பவர் எதிரில் ஓடிவந்து உங்கள் காரை உடைத்துவிட்டு டிரைவரை அடித்துவிட்டார்கள் என்று சொன்னார்; நாங்கள் காரை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்தோம்; எதிரிகள் சுமார் 50 பேர்களுடன், தடி, கத்தி இவைகளை ஏந்திக் கொண்டு, 'தி. மு. க. ஒழிக' 'விநாயகத்திற்கு ஜே' 'தி. மு. க. வினரைக் கொல்லுங்கள்,' 'வெட்டுங்கள்' என்று கூச்சலிட்டுக்கொண்டு எங்களுடன் கொண்டுவந்த பெட்ரோமாக்ஸ் விளக்கை முதலில் உடைத்துவிட்டார்கள்; எங்களையும் அடிக்கத் துரத்தி வந்தார்கள்; நானும், டி. வி. நாராயணசாமியும் ஒரு ஆசிரியர் வீட்டிற்குள் சென்று ஆபத்திலிருந்து தப்பித்துக்கொண்டோம்; இதேபோல் எங்களுடன் வந்தவர்களும் பல்வேறு வழியில் சிதறிஓடினார்கள்; சுமார் ½ மணி நேரம் கழித்து நானும், நாராயணசாமியும், மற்றவர்களும் எங்கள் காரை வந்து பார்த்தோம்; டயர் பிளேடால் அறுக்கப்பட்டிருந்தது; என்ஜின் ஒயர்கள் கத்தரிக்கப்பட்டிருந்தது; ஆனாலும், பல்பும் காணவில்லை; பானெட் கீழே எறியப்பட்டு கிடந்தது. ரேடியேட்டில் மணல் இருந்தது; மற்ற பாகங்கள் யாவும் பழுதுபட்டுக் கிடந்தது. டிரைவர் அங்கு காணவில்லை; இதை நானே பார்த்தேன்.

"சிறிது நேரம் கழித்து டிரைவர் வந்தான்; அவன் சொன்னதாவது:—நான் காரைப்பார்த்துக் கொண்டிருக்கும்போது 5 பேர் வந்து என்னை அடித்து, பலவந்தமாகக் காரிலிருந்து இறக்கி, காரை சேதப்படுத்திவிட்டு, பயங்கரமான இடத்திற்கு அழைத்துச் சென்று நான் கூச்சல் போடாதவாறு என் வாயை மேல் துண்டால் கட்டிவிட்டு, மற்றிருவரை, என்னைப் பார்த்துக்கொள்ளும்படிச் சொல்லிவிட்டு, அந்த ஐவரும் ஓடிவிட்டார்கள்; சிறிது நேரம் கழித்து அவ்வழியே வந்த போலீஸ் லாரி சத்தம் கேட்டவுடன் அவ்விருவரும் என்னைக் கட்டியிருந்த மேல் துண்டை அவிழ்த்துக்கொண்டு, ஓடிவிட்டார்கள்; ஏழு பேர் பெயரும் தெரியாது; ஆனால் காட்டினால் அடையாளம் காட்டுவேன்,' என்று சொன்னான்.

"மறுநாள் காலை போலீஸ் ஸ்டேஷனில் ஆஜராயிருந்த எதிரிகளை டிரைவர் அடையாளம் காட்டினான்; அன்றிரவே போலீஸ் இன்ஸ்பெக்டர் என்னிடம் 'ஸ்டேட்மெண்ட்' வாங்கிக் கொண்டார்; காரை, அதிகாரிகள் பார்வைக்கு விட்டுவிட்டு, மறுநாள் அரக்கோணம் சென்று விட்டேன். அன்றையக் கூட்டத்தில் விநாயகம் ஆதரிக்கும் ஆரம்பக் கல்வி திட்டத்தைக் கண்டித்துப் பேசினேன்."

இரண்டாவது சாட்சி தோழர் ஏ. எல். சி. சஞ்சீவி கூறுகையில், 26—9—53ல், தன்னை எதிரிகள் துரத்தி வரும்போது, தன்னுடைய கைகெடிகாரத்தையும், ரூ. 72/ ரொக்கத்தையும் இழந்து விட்டதாகக் கூறினார்.

மூன்றாவது சாட்சி தோழர் என். ஏ. ரசீத், 26—9—53ல், மேற்படி கும்பல் தன்னைத் துரத்தி வந்தபோது ஓடுகையில் கீழே விழுந்து கையிலும், காலிலும் கல்லடிபட்டு நடக்கமுடியாத நிலையில் இருந்தபோது கூட எதிரிகள் மீண்டும் அடித்தார்களென்றார்.

நான்காவது சாட்சியாக தோழர் ஏ. முனுசாமி விசாரிக்கப்பட்டார்.

எதிரிகள் சார்பில் வக்கீல் என். வைத்தியநாத அய்யர் ஆஜராயிருந்தார்.

வழக்கு 4—5—54-க்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ந. வி)

மணமகளை அழைத்துப்போக மறுப்பு

திருமணத்திற்குப் பிறகு மணமகள் தந்தையிடம் ரூ. 5000 கேட்ட மணமகன் குழுவினர் கைது

புதுடில்லி, ஏப். 30—
நந்தலால், சமன்லால், அர்பான்ஸ்லால் என்பவர்கள், ஏமாற்றுதல், நம்பிக்கை மோசடி ஆகிய குற்றங்களுக்காகப் போலீசாரால் கைது செய்யப்பட்டனர்; அவர்களை தலைக்கு ரூ 2000 ஜாமீனில் விடுதலை செய்யும்படி புதுடில்லி செஷன்ஸ் நீதிபதி உத்திரவிட்டாராம.

ராஜபஜாரில் திருமணம் நடந்த பின்னர் மணிவியின்றி தனிதாக வீடு திரும்பியதாகக் கூறப்படுகிறது.

மணமகன் சார்பினர், திருமணம் நடந்த பின்னர் மணமகளின் தந்தையை ரூ. 5000 கேட்டதாகவும் அவர் தன்னால் கொடுக்க இயலாத நிலையில் இருப்பதாக வேண்டிக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

திருமணத்திற்காக, தான் செலவு செய்த ரூ. 2000-த்தையும் ஏமாற்றியதாக மணமகன் கட்சியார் மீது மணமகள் தந்தை வழக்கு தொடுத்திருப்பதாகத் தெரிகிறது. பணத்தை திருப்பித்தர அவர்கள் மறுத்தனர்.

மு. கருணாநிதி

சுற்றுப்பயணம்

★

மே 8: ஆரணி
12: சென்னை (ஆர்பர்)
14: திருப்புவனம் (மதுரை மாவட்டம்)
15: அருப்புக்கோட்டை
27: ஆலந்தூர் (சென்னை)
29: பரமக்குடி
30: பீமநகர் (திருச்சி)

ஜூன் முதல் வாரம் தஞ்சை மாவட்ட சுற்றுப் பயணம்.

மாதர்கள் சிறுதொகை சேமிப்பு இயக்கம்

புதுடெல்லி, ஏப். 30—
சிறு தொகைகளை சேமித்து வைக்கும் வழக்கத்தை மாதர்களிடையே வளர்ப்பதற்கு ஒரு விசேஷ நடவடிக்கையாக சென்ற ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்ட மாதர்கள் சிறு சேமிப்பு இயக்கத்தின் மூலமாக இதுவரை சுமார் 13 லட்ச ரூபாய் வசூலாகியிருக்கிறது.

சென்னை 7-வது வட்ட தி. மு. கழகம்

28—4—54 இரவு 8 மணிக்கு கழக மனையில் உறுப்பினர்கள் கூட்டம் தோழர் து. அமரன் தலைமையில் நடைபெற்றபோது உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: அ. செங்குட்டுவன்; துணைச் செயலாளர்: வே. பாகன்; பொருளாளர்: ல. கணேசன்; மாவட்டப்பிரதிநிதிகள்: தே. கா. ஆண்டகை, வே. வா. வேந்தன்; செயற்குழு உறுப்பினர்களாக 9 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சீவில்லிபுத்தூர் தி. மு. கழகம்

26—4—54-ல் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

செயலாளர்: பொன். அரசப்பன்; துணைச் செயலாளர்: சோமு; பொருளாளர்: செந்தியப்பன்; செயற்குழு உறுப்பினர்கள்: மா. குருசாமி, நாராயணன், கோ. பெருமாள், சுதந்திரம், சு. ராமதாசு, ம. கோவிந்தன், இரா. அற்புதசாமி, ஏமராசு.

உயர்நிலை துவக்கப்பள்ளி ஆண்டு விழா

அருப்புக் கோட்டை வட்டாரம் இராமநாய்க்கன்பட்டி க்ஷத்திரிய உயர்நிலைத் துவக்கப்பள்ளியின் 11-வது ஆண்டு விழா 21—4—54ல் திரு வி. சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது திரு. எஸ். கணபதி ஆண்டு அறிக்கை வாசித்தார். திரு. சி. ஏ. ஹென்றி விரிவுரையாற்றினார். பள்ளி மாணவ மாணவிகளால் கதம்ப நிகழ்ச்சிகளும் 'ஏழை மாணவன் வெற்றி' என்ற நாடகமும் நடைபெற்றது. தலைவர் முடிவுரையாகப் பேசியபின், திரு. முத்து நாடார் நன்றி கூறினார்.

சூளேசுவரன்பட்டி தி. மு. கழகம்

25—4—54ல், செயற்குழுக் கூட்டம் தோழர் அ. மதிவாணன் தலைமையில் நடைபெற்றபோது, புதிய கல்வித் திட்டத்தை வாபஸ் வாங்குமாறு புதிய அமைச்சர் அவையைக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

பால்பவுடர் கடத்தலுக்காகவடநாட்டு வியாபாரிகளுக்குத் தண்டனை

அலங்காரப் பொருட்கள் எனப் பொய் கூறினர்

மதுரை, ஏப். 30—
பம்பாய் மாநிலத்தில் பால் பவுடருக்குக் கட்டுப்பாடு உண்டு; சென்னையில் கட்டுப்பாடு கிடையாது. இங்கு விலை மலிவு; பம்பாயில் விலை கூடுதல். எனவே, இங்கிருந்து பால் பவுடரை கள்ளத்தனமாக பம்பாய்க்கு அனுப்பி, கொள்ளை லாபம் அடிக்கும் வியாபாரம் தாராளமாக நடைபெற்று வந்தது. இதுபற்றி பம்பாய் அரசாங்கத்தின் அறிக்கை ஒன்றும் சுமார் ஆறு திங்களுக்கு முன் வெளியாகி இருந்தது. இதுபற்றி, சென்னை போலீஸ் தீவிரமாக நடவடிக்கை எடுத்தது. அதன் பலனாக ஷெங்கமலால் ஜீவராஜ் என்ற வியாபாரியும், காம்சந்த் என்ற அவர் ஊழியரும், கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளார்கள்.

8—3—54-ல் 36 மணங்கு எடையுள்ள பால் பவுடரை, அலங்கார பொருட்கள் என்று பொய் கூறி பம்பாய் நகருக்கு, ரயில் மூலம் மேற்படி இருவரும் அனுப்பி இருக்கிறார்கள். முதல் குற்றவாளி, இரண்டாவது குற்றவாளியைக் குற்றம் செய்யத் தூண்டினார் என்பது வழக்கு.

வழக்கை விசாரித்த முதல் மாநில மாஜிஸ்திரேட் முதல் குற்றவாளிக்கு ரூ 75 அபராதமும், இரண்டாவது குற்றவாளிக்கு 25 ரூபாய் அபராதமும், கட்டத்தவறினால் முறையே ஆறு வாரம், மூன்று வாரம் எனத் தண்டனை அளித்தார்.

சோழத்திரம்புடையூர் தி. மு. கழக

முதலாவது ஆண்டு விழா

26—4—54 மாலை 5 மணிக்கு தோழர் சி. முனுசாமி தலைமையில் மேற்படி ஆண்டு விழா நடைபெற்றது. தலைவர், நெய்வேலியில் வடநாட்டினர் ஆதிக்கத்தினால் தமிழர்கள்படும் இன்னல்களை விளக்கினார். தோழர் ஆர். கோவிந்தசாமி வரவேற்புரை ஆற்றினார்; தோழர் லா. க. இராமலிங்கம் நேருவின் போக்கைக் கண்டித்தார்; திட்டக்குடி தோழர் மா. பொன்னம்பலம் கல்லக்குடி போராட்டம் ஏன் நடத்தப்பட்டது என்பதையும் வடநாட்டினர் ஆதிக்கத்தினால் திராவிடர்கள் அடையும் இன்னல்களைப்பற்றியும் பேசினார்; தோழர் எம். சாமிநாதன் நன்றி கூறினார்.

வலங்கைமான் தி. மு. க

25—4—54 காலை 10 மணிக்கு விக்டரி டாக்கீசில் பொதுக் குழுக் கூட்டம் நடைபெற்றபோது, நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

வி. பி. உத்தமன்-செயலாளர்; என். சாமிநாதன் துணைச் செயலாளர்; கே. வீரையன்-பொருளாளர்; எஸ். சிவராமன்-மாவட்டப் பிரதிநிதி; வி. ஓ. அரங்கன் ஜெல்-விளம்பர உறுப்பினர்; மற்றும் எட்டுபேர்கள் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

சென்னை நகர ஆரம்ப ஆசிரியர் யூனியன்

25—4—54ல், கே. ஆர். சி. பள்ளியில், திரு. எம். கோவிந்தசாமி தலைமையில் மேற்படி யூனியனின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றபோது, 11-4-54ல் நடைபெற்ற மாநாட்டின் வரவு—செலவு கணக்குகளைப் பரிசீலனை செய்ய 3-உறுப்பினர்களை நியமித்தும், ஆசிரியர் சூரிய நாராயணராவ் வழக்கு சம்பந்தமாக உதவி நிதி திரட்ட 10 உறுப்பினர்களைக் கொண்ட கமிட்டி நியமித்தும், மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை மந்திரி மூலம் மேலதிகாரிகளிடம் சமர்ப்பிக்க தூதுக் குழு ஒன்றை நியமித்தும், 8—5—54ல் அடுத்த கூட்டத்தை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

60 ஏக்கர் நெல் பயிர் அழிவு

பொதுவுடைமையினர் போக்கு?

ஏலூரு, ஏப். 29—
ஏலூருக்கு 5 மைல் தொலைவில் உள்ள பெடபாடு கிராமத்தைச் சேர்ந்த மல்லிகார்ஜுனராவ் என்பவருக்கு ஒதுக்கப்பட்டிருந்த 60 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யப்பட்டிருந்த நெல் பயிரை பயன்படாத அளவுக்கு அக்கிராமவாசிகள் பாழாக்கி விட்டதாகத் தெரிகிறது.

சாகுபடி செய்யப்பட்டிருந்த நிலத்தில் சுமார் 400 மாடுகளை ஓட்டி மேய்த்து விட்டதாகக் கூறப்படுகிறது. இது சம்பந்தமாக கம்யூனிஸ்டு தலைவர் உள்பட 20 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

வேண்டுதல்

மாச்சம்பாளையம் தி. மு. க. கிளை உறுப்பினரான வீ. ராமப்பன் அவர்கள் தன் மனநிலை சரியில்லை என்று சொல்லிக்கொண்டிருந்தவர் ஒரு வாரமாகக் காணவில்லை; அவரது பிரிவால் சமீபத்தில் பிரசவமாகிய அவரது தங்கையின் உடல்நிலை மிக மோசமாக இருப்பதால் உடனே வந்து அவர் தன் தங்கையைக் காண வேண்டுகிறேன்.

மாநிறம்; 5 அடி உயரம்; வயது 23; மெலிந்த உடல்: அவரைக் கண்டால் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அறிவிக்கவும்:—

செயலாளர், தி. மு. க. கிளை, 10/50, மாச்சம் பாளையம், சுந்தராபுரம் (அஞ்சல்), கோவை மாவட்டம்.

மஜீது நினைவு மன்றம்

சென்னை, ஏப். 29—
25—4—54-ல் சென்னை கோமளீஸ்வரன் பேட்டையில் மஜீது நினைவு மன்றம் அமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: அந்தோனி இ. மாறன்; துணைச் செயலாளர்: ஆப்தின்; பொருளாளர்: அலியா; செயற்குழு உறுப்பினர்கள்: கபூர், கலைமணி, எம். எஸ். காதர், ஜமால், ஷேக் மொய்தீன், வி. இளஞ்சேரலாதன், மருதவாணன், முதலானோர். மன்ற அமைப்பின் நோக்கம் குறித்து தோழர்கள் வி. இளஞ்சேரலாதன், எம். எஸ். காதர் விரிவுரையாற்றினர்.

விவசாயிகள் பொதுக் கூட்டம்

வடக்கப்பட்டு (வ. ஆ.) ஏப். 28—
இவ்வூரில் விவசாயிகள் சங்கச் சார்பில் ஓர் பொதுக் கூட்டம் தோழர் வி. டி. சிவராமன் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் தோழர்கள் வி. என். நடராசப்பன், டாக்டர் கன்னபிரான் பேசினர். புறம்போக்கு நிலங்களில் பயிரிட்ட ஏழை விவசாயிகளுக்கு விதித்துள்ள அபராதத்தைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

‘அரசியல் விடுதலையின் விடிவெள்ளி சமுதாயப் புரட்சி’

—(:)—

‘சமுதாயச் சீரமைப்புக்கு உழைப்பது தி. மு. கழகத்தின் தனிச் சிறப்பு’

—(:)—

‘மறுமலர்ச்சிப் பாதையில் திராவிடரை நாம்தான் அழைத்துச் செல்ல வேண்டும்’

சமூக மாநாட்டின் வ. கு. தலைவர் ஜி. பி. சோமசுந்தரம் வரவேற்புரை

சமூக சீர்திருத்த மாநாட்டுப் பிரதிநிதிகளையும், தாய்மார்களையும், தோழர்களையும் வரவேற்று மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் கூறியதாவது:—

“தி. மு. கழகத்தினர் நடத்தும் இந்தச் சமூக சீர்திருத்த மாநாடு, கொள்கையளவில் புதியதன்று; பல ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கிய சுயமரியாதை இயக்கத்தின் பெரும் பணியின் தொடர்பே இம்மாநாடு! இந்த நாட்டு மக்கள், சமுதாயத்தினிடையே காணப்படும் பேதங்களை அகற்றி பகுத்தறிவு பூர்வமாக, திராவிட நாட்டின் ஒரு உன்னத, ஒப்பற்ற சமுதாயத்தை அமைப்பதில் நாம் பெரும் பங்கு கொண்டுள்ளோம்; அதிலும், குறிப்பாக தி. மு. கழகத்தினராகிய நாம் இந்த நாட்டில் பன்னெடுங்காலமாய் வேரூன்றிப் போயுள்ள ஜாதி முறைகளையும், சமய பேதங்களையும், மதமாச்சரியங்களையும் போக்குவதில் மற்ற எவரையும்விட நமது முழு வன்மையையும் செலுத்துகிறோம்.

“திராவிட நாட்டில்-ஏன்-இந்திய உபகண்டம் முழுமையிலும் சமுதாய முன்னேற்றத்திற்காகப் பணிபுரியும் இயக்கம் ஒன்று உள்ளது என்றால், அது திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

“பிறப்பில் பேதமும், நடைமுறையில் உள்ள அநீதிகளும் ஒழிக்கப்பட வேண்டும்—பெண்ணடிமை தீரவேண்டும்—வாழ்வில் வளம் காணமுடியாத சமூக உயர்வு தாழ்வுகள் முடிவுறவேண்டும்—உலகிலே பிறக்கும் மனிதன் சம உரிமையுடன் ஆண்டான், அடிமை, உயர் வகுப்பான், தாழ்ந்த குலத்தான் என்ற வேறுபாடு இன்றி தன் தகுதியால், திறமையால் உயர்ந்த வாழ்வு பெற்று, தான் பிறந்த நாட்டின் நாகரிகத்தையும் பண்பாடுகளையும் காக்கவேண்டும்—என்றெல்லாம் இந்நாட்டில் முதல் முதல் பகுத்தறிவுப் பிரசாரம் செய்தவர்கள் நாம்தான்; இனியும் செய்ய வேண்டியவர்களும் நாமே!

“நாம் வாழும் இத்திரு நாட்டில் சமுதாய மறுமலர்ச்சிக்காக தங்கள் வாழ்வினை ஒப்படைத்த சமுதாயச் சிற்பிகளுக்கு நான் இச்சந்தர்ப்பத்தில் அன்பு கலந்த வணக்கம் செலுத்துகிறேன்.

“சமுதாய சீர்திருத்தம் வேண்டும் என்று கூறும் நாம், நாட்டின் மற்றைய அரசியல், பொருளாதாரப் பிரச்னைகளை ஒதுக்கித் தள்ளிவிடவில்லை. எந்த நாட்டுச் சமுதாயம் உன்னத சமுதாயமாக, உன்னதநோக்கங்களைத் தன்னிடம் கொண்டுள்ளதோ, அந்த சமுதாயம்தான் புதிய அரசியல் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு நாட்டு மக்களை நல்ல பாதைக்கு அழைத்துச் செல்லத் தகுதிபெற்றதாகும். சமுதாயப் புரட்சி அரசியல் விடுதலையின் விடிவெள்ளியாகும் திராவிட நாட்டு விடுதலைப் போரை நடத்தும் நாம், அணிசேர் போன்ற சமுதாயத்தினைத் திருத்தி அமைக்கும் பெரும் பணியினைச் செய்ய விரும்புகிறோம்—செய்தும் வருகிறோம்.

“இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் உங்களுக்கு மிகப் பெரிய பொறுப்புகளும், கடமைகளும் உண்டு; வருங்கால சமுதாயத்தை உருவாக்கும் பொறுப்பு உங்களிடம்தான் உள்ளது. நாம் செய்யும் பணி சாதாரணமானது அல்ல; ஏற்கனவே உள்ள சமூக அமைப்பில் காணப்படும் கோணல்களையும் நீக்கி மறுமலர்ச்சிப் பாதையில் திராவிட நாட்டு சமுதாயத்தை நாம் அழைத்துச் செல்ல வேண்டும்—ஆகவே, அக் கடமையினைச் செய்ய வாரீர்! வாரீர்!”

சமுதாய சீர்திருத்த மாநாட்டு நிகழ்ச்சிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தோழர் ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., “தொழிலாளரும் சமுதாயமும்” என்னும் பொருளில் தொழிலாளருக்குத் தேவைப்படும் சீர்திருத்தக் கருத்துக்களைத் தந்தார்.

அடுத்து, தோழர் அன்பழகன், ‘அறிவுப் பாதை’யைக் காட்டினார்.

பின்னர் தோழர் இரா. நெடுஞ்செழியன், “மதமும், பகுத்தறிவு நெறி”யும் எப்படி இரு துருவங்கள் என்பதை எடுத்துச் சொன்னார்.

தலைவர் முடிவுரைக்குப் பின், மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சிகள் நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி குழுவினரின் ‘காதல் ஜோதி’யுடன் முடிவுற்றன.

அரசியல் மாநாட்டு நிகழ்ச்சிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தோழர் ப. ராமலிங்கம் மாநாட்டின் வெற்றிக்கு ஒத்துழைத்தவர்களுக்கு நன்றி நவின்றார்.

இரவு கே. ஆர். ராமசாமி குழுவினரின் “ஓர் இரவு” நடைபெற்றது.

மாநாடுகள் எவ்வளவு சிறப்புற இருந்தன என்கிறீர்களா? பொதுச்செயலாளரையே கேளுங்களேன்!

“மாநாட்டின் எல்லா ஏற்பாடுகளும் வெகு நன்றாக அமைந்துள்ளன. ஒலி, ஒளி அமைப்புகள், பிற மாநாட்டார் கற்றுக்கொள்ளத் தக்க முறையில் அமைந்துள்ளன. கட்டுப்பாட்டுடன் கண்ணியமாக, கடமையாற்றும் சேலம் தோழர்களின் சிறந்த பணியை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். என் நன்றியை, பொதுச் செயலாளன் என்ற முறையில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.”

1951-ல் நடந்த சேலம் மாவட்ட தி. மு. கழக முதல் மாநாட்டின்போது, மாநாட்டுப் பந்தல் புயலால் சாய்க்கப்பட்டதும், கழகக் காளையர், மீண்டும், பந்தலைப் புதுப்பித்ததும், பொதுச்செயலாளரின் சிறந்த பாராட்டுதலைப் பெற்றிருந்தன. அந்த சேலம் தோழர்கள்தான் 2-வது மாநாட்டையும் நடத்தினர்.

மாநாட்டின் வெற்றிக்குக் காரணமாயிருந்தவர்களான ஜி. பி. சோமசுந்தரம், செயலாளர்: ப. ராமலிங்கம், துணைச் செயலாளர்: ப. கண்ணன், பொருளாளர்: பி. எம். குப்புசாமி தொண்டர் படைத் தலைவர்: இராதாண்டவன், துணைத் தலைவர்: பி. எம். கோபால் ஆகியோரும், நூற்றுக்கணக்கான தொண்டர்களும், இவரும் ஆத்தூர் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ, சேலம் நகர தி. மு. கழகச் செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் ஆகியோரும் தோழர்களின் பாராட்டுதலுக்குரியவர்களாவர்.

நிலதானம்!

திருவனந்தபுரம், மே 2—

திரு-கொச்சியில் ஏற்கனவே வசூலிக்கப்பட்ட 19,000 ஏக்கர் நிலமில்லாமல் கன்னன் தேவன் குன்றில் 46,000 ஏக்கர் நிலமும் பூமிதான இயக்கத்திற்குக் கொடுக்கப்படும்.

ஏ. கோவிந்தசாமி —எம். எல். ஏ

சட்ட சபை திராவிடக் கட்சியில் பணிபுரிவார்!

★

தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்கள், திராவிட சட்டசபைக் கட்சியில் சேர்ந்து பணியாற்ற தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களின் அனுமதி பெற்றுவிட்டதாக சேலம் தி. மு. கழக மாநாட்டில் நேற்று அறிவித்தார். (ந. நி)

கம்யூனிஸ்டுகள் காங்கிரசில் கலந்தனர்

மன்னார்குடி, ஏப். 29—

மன்னார்குடி வட்டத்தைச் சேர்ந்த 12 கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களுக்கு காங்கிரஸ் கட்சியின் ‘புனித நீர் முழுக்கு’ நடைபெற்று இருக்கிறதாகத் தெரிய வருகிறது.

இவ்வரசியல் புனித நீர் முழுக்கிற்கு, தஞ்சை மாவட்டக் காங்கிரஸ் குழு தலைவரான கே. எஸ். சாம்பசிவ அய்யர்தான் பிரதம புரோகிதராக இருந்து நடத்தி வைத்து இருக்கிறார்!

பிரெஞ்சிந்திய குண்டர்கள் கைவரிசை!

துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவருக்குக் காய[ம்]

புதுச்சேரி, மே 2

இங்கிருந்து 25 மைல் தூ[ர]த்தில் உள்ள கொடக்கூர் என்[ற] இந்திய யூனியன் கிராமத்தி[ல்] சுமார் 200 பேர் கொண்[ட] பிரெஞ்சிந்தியக் குண்டர்க[ள்] மீது மலபார் விசேட போலீ[ஸா]ரால் துப்பாக்கிப் பிரயோக[ம்] செய்யப்பட்டதாகத் தெரிகிற[து.] ஒரு பிரெஞ்சிந்தியப் போலீ[ஸ்] இந்திய எல்லையைக் கடந்த[த]ற்காக கைது செய்யப்பட்டபோ[து] இச்சம்பவம் நடந்ததாம்.

துப்பாக்கிப் பிரயோகத்த[ால்] இரண்டு பிரெஞ்சிந்தியப் போ[லீ]சார் காயமடைந்ததாகச் சொ[ல்]லப்படுகிறது.

மலபார் போலீசார் புது[ச்]சேரிக்குச் சென்றுகொண்டிருக்கும்போது இந்த நிகழ்[ச்சி] நடந்ததாம். செட்டிப்பட்[டி]யிலிருந்து இந்த பிரெஞ்சிந்[திய] குண்டர்கள் கூட்ட[ம்] பாதையின் குறுக்கே ஒரு ப[னை] மரத்தைப் போட்டு இந்திய எ[ல்]லைக்குள் சென்றுகொண்டிருந்[த] போலீஸ் வண்டியை மறித்த[ன]ராம். அந்த லாரி டிரைவ[ர்] கீழே இறங்கி, பனை மரத்[தை] அப்புறப்படுத்த உதவி செய்யும்ப[டி] கேட்டதாகவும், அந்தக் கும்ப[ல்] உடனே போலீசார் மீது க[ல்] லெறிந்ததாகவும் கூறப்படுகிற[து.] இரண்டு இந்தியப் போலீச[ார்] காயமடைந்ததும், மலபா[ர்] போலீஸ் அந்த கும்பலை நோக்கி[ச்] சுடவே அவர்கள் கலைந்துவிட்[ட]னர். போலீஸ் லாரியின் மு[ன்]புறம் மிகவும் சேதமடைந்[து] விட்டது.

கழகக் கூட்டம்

★

சாத்தூர்
‘இராமக்குடும்பன்பட்டி’

5—5—54 மாலை 5-30 மணிக்கு

தலைவர்: எஸ். தங்கசாமி

பேசுவோர்:

எம். எஸ். இராமசாமி
சிவசண்முகசுந்தரன்
எஸ். எஸ். பி. சண்முகசுந்தரன்
ஆர். பி. சன்யாட்சேன்
அ. நடராசன்

திருமண அழைப்பு

5—5—54 புதன்கிழமை காலை 9 மணிக்கு தோழர் கோவிந்தசாமிக்கும்—தோழியர் இராணிக்கும் தோழர் என. வி. நடராசன் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெறும். தோழர்கள் மு. புரட்சிமணி, கோ. இளவரசு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர் இடம்: நெ 26, செயின்ட்மேரிஸ் சாலை, மந்தைவெளி, மயிலாப்பூர்.

சென்னை 43-வது வட்ட தி. மு. க. தோழர்கட்கு

6—5—54 வியாழன் இரவு 8 மணிக்கு 43-வது வட்ட தி. மு. கழக மனையில் நடைபெறவிருக்கும் செயற்குழு கூட்டத்திற்கு செயற்குழு உறுப்பினர்கள் தவறாது வரவேண்டுமென்று மேற்படி கழகச் செயலாளர் புரட்சிமணி அறிவிக்கிறார்.

பஸ்லுல் ஹக் பிராயச்சித்தம்!

கல்கத்தா, மே 1—

இந்து—முஸ்லிம் ஒற்றுமையே தம் வாழ்க்கை லட்சியமென்றும், தம் வாழ்நாளின் கடைசி காலத்தை இதற்காகவே செலவிடப் போவதாகவும் 82 வயதான கிழக்கு வங்க முதன் மந்திரி பஸ்லுல் ஹக் தெரிவித்தார்.

“பொது மொழியும் கலாசாரமும் வங்காளிகள் அனைவரையும் ஒன்றுபடப் பிணைக்கின்றன; அரசியல் பிரிவினையினால் இந்த ஒற்றுமையைக் குலைக்க முடியாது,” என்றார் அவர்.

கிழக்கு பாகிஸ்தான் இடையில் பிரயாணத்திற்கு பாஸ்போர்ட் “விஸா” முறையை ரத்து செய்வதற்கு பாகிஸ்தான் மத்திய சர்க்காரை தன்னால் இணங்கவைக்க முடியும் என்று தாம் நம்புவதாகக் குறிப்பிட்டார்.

மல்யுத்த மங்கையின் வெற்றி முழக்கம்

பரோடா, மே 2—

“என்னைத் தோற்கடிப்பவரைத்தான் நான் மணப்பேன்” என்று சவால் விட்டிருக்கும் பரோடா மல்யுத்தப் பெண் ஹமீதாபானு இன்று நடைபெற்ற சுயம்வர மல்யுத்தத்தில் போட்டியிட்ட பாபா பயில்வான் என்ற ஒரு பிரம்மச்சாரியைத் தோற்கடித்தார். ஏற்கனவே இரு வாலிபர்கள் இவரால் மல்யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டுள்ளனர்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு மாநாடு

கெய்ரோ, மே 2—

அரபு, ஆப்பிரிக்க நாட்டு பிரதிநிதிகள் அடுத்த ஆண்டில் ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு மாநாட்டை நடத்த உத்தேசித்திருக்கிறார்கள்.

கொரிய மக்களுக்குப் புனர் வாழ்வு?

சியோல், ஏப். 30

கொரியா குடியரசைச் சேர்ந்த 40,000 மக்கள் இப்போது கொ[ரி]யாப் பண்ணைகளில் உசித்து வி[வ]சாயத்தில் ஈடுபடுகின்றனர். சுமார் 90,000 மக்களை விவசாயத் துறையில் ஈடுபடச் செய்யும் முதல் அறுவடை கிடைக்கும் வரை இவர்களுடைய உணவுக்காக ஐ. நா. கொரிய உதவி ஸ்தாபனம் 538 டன் உணவுப் பொருட்கள் அளித்துள்ளது என்றும் தெரிய வருகிறது.

பெவான் ‘புரட்சி’!

லீட்ஸ், மே 5

‘பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை ஆதரித்து இந்தோ — சீனாவுக்கு ஒரு சிப்பாயைக் கூட அனுப்ப பிரிட்டன் தயாராக இல்லை’ என்று அமெரிக்காவுக்கு பிரிட்டன் தெரிவித்துவிட வேண்டுமென்று பிரிட்டிஷ் தொழிற் கட்சி இடதுசாரித் தலைவர் அநூரின் பெவான் மே தின விழாப் பேச்சையில் தெரிவித்தார்.

கல்லூரிக்கு நன்கொடை

எர்ணாகுளம், மே 2

இங்குள்ள ஏவைத் என்ற ஊரில் ஏற்படுத்தப்பட இருக்கும் ஒரு முதல்தரக் கல்லூரிக்கு திரு—கொச்சி இராஜப் பிரமுகர் ரூ. 25,000 நன்கொடை கொடுத்திருக்கிறார்.

* * *

பாட்னா, மே 2

தர்பாங்கா மகாராஜா பூதான எக்ஞத்திற்கு 11,8,[…] ஏக்கர் நிலம் கொடுத்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழக அச்சகத்தார் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குள நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. ந. அண்ணாதுரை, எம். ஏ.,